பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

13 05 2025 **TUESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பஞ்சாபின் ஆதம்பூர் விமானப்படை தளத்திற்கு சென்று விமானப்படை வீரர்களுடன் கலந்துரையாடினார்.

2. ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து மக்களுக்கு எடுத்துக்கூறும் வகையில், பிஜேபி சார்பில் இன்று முதல் 11 நாட்களுக்கு மூவர்ணகொடி யாத்திரை நடைபெறவுள்ளது.

3. சிபிஎஸ்இ 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் இன்று வெளியிடப்பட்டன.
   **இதில் நாடு முழுவதும் 88.39% மாணவ, மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

4. மகளிர் மேம்பாட்டிற்கான திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழகம் முன்னோடியாக திகழ்கிறது என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

5. தாய்லாந்து ஓபன் பேட்மிட்டன் போட்டி பாங்காக்கில் இன்று தொடங்குகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் --*</u>

<<<<<>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பஞ்சாப் மாநிலம் ஆதம்பூர் விமானப்படை தளத்திற்கு சென்று விமானப்படை வீரர்களுடன் கலந்துரையாடினார்.

பாகிஸ்தானுக்கு எதிரான ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் பங்கேற்ற வீரர்களுடன் அவர் கலந்துரையாடியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதுதொடர்பாக, தமது சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில், இந்திய விமானப்படையின் துணிச்சல் மிக்க வீரர்களுடன் கலந்துரையாடியதாக குறிப்பிட்டுள்ளார்.

நாட்டிற்காக துணிச்சலை வெளிப்படுத்தி, உறுதிப்பாட்டுடனும், அச்சமின்றியும் பணியாற்றும் வீரர்களுடன் கலந்துரையாடியது ஒரு சிறந்த அனுபவமாக அமைந்தது என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

நாட்டிற்காக பாதுகாப்புப்படையினர் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளுக்கும் நாடே பெரிதும் நன்றி செலுத்துவதாகவும் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், புதுதில்லியில் இன்று பாதுகாப்புத்துறை செயலாளர் திரு ராஜேஷ் குமார் சிங், முப்படைகளின் தலைமை தளபதி ஜென்ரல் அனில் சௌகான் மற்றும் ராணுவ உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இதனிடையே, ஜம்மு காஷ்மீரில் சோபியான் மாவட்டத்துக்கு உட்பட்ட **Shukroo Keller** வனப்பகுதியில் பாதுகாப்புப்படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே இன்று காலை துப்பாக்கிச்சண்டை நடைபெற்றதாக காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

அப்பகுதியில், தீவிரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலின்பேரில், ஜம்மு காஷ்மீர் காவல்துறையினர், ராணுவம் மற்றும் மத்திய ரிசர்வ் காவல்படையினர் கூட்டாக மேற்கொண்ட தேடுதல் வேட்டையின்போது தீவிரவாதிகள் துப்பாக்கியால் சுட்டதையடுத்து, பாதுகாப்புப்படையினரும் பதிலடி தாக்குதலில் ஈடுபட்டனர்.

<<<<<>>>>>

காற்றாலை மற்றும் சூரியசக்தி மின் உற்பத்தியில் இந்தியா உலகின் மூன்றாவது பெரிய நாடாக உருவெடுத்துள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்ட மின்உற்பத்தி தொடர்பான சர்வதேச ஆய்றிக்கையின்படி, உலகின் மொத்த மின்சார உற்பத்தியில் சுமார் 15 சதவீதம் அளவிற்கு காற்றாலை மற்றும் சூரியசக்தி மூலம் உற்பத்தி செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பசுமை மின்சாரத்தில் சுமார் எட்டு சதவீத அளவிற்கு நீர்மின் திட்டங்கள் மூலமும், பத்து சதவீதம் அளவிற்கு காற்றாலை மற்றும் சூரியசக்தி மூலம் உற்பத்தி செய்யப்படுவதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

2024-ஆம் ஆண்டில் மட்டும் 24 கிகாவாட் அளவிற்கு கூடுதலாக சூரியசக்தி மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகவும், இது அதற்கு முந்தைய ஆண்டைவிட இரண்டு மடங்கு அதிகம் என்றும் அந்த ஆய்வறிக்கையை சுட்டிக்காட்டி, மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த பட்டியலில் சீனா முதலிடத்திலும், அமெரிக்கா இரண்டாவது இடத்திலும் உள்ளன.

<<<<<>>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து மக்களுக்கு எடுத்துக்கூறும் வகையில், பிஜேபி சார்பில் இன்று முதல் 11 நாட்களுக்கு மூவர்ணகொடி யாத்திரை நடைபெறவுள்ளது.

நாடு முழுவதும் இம்மாதம் 23-ஆம் தேதிவரை நடைபெறும் இந்த யாத்திரையின்போது கட்சியின் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்று, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு தீவிரவாதத்துக்கு எதிராக மேற்கொண்டுவரும் உறுதியான நடவடிக்கை குறித்து எடுத்துரைக்க உள்ளனர்.

முன்னாள் ராணுவத்தினர், சமூக சேவகர்கள் உள்ளிட்டோரும் இதில் பங்கேற்க இருப்பதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சஞ்ஜீவ் கண்ணா இன்று பணியில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 10-ஆம் தேதி தலைமை நீதிபதியாக பதவியேற்ற திரு சஞ்ஜீவ் கண்ணா, சுமார் ஆறு மாதம் இப்பொறுப்பை வகித்துள்ளார்.

இதையடுத்து புதிய தலைமை நீதிபதியாக திரு **B R** கவாய் பதவியேற்க உள்ளார்.

<<<<<>>>>>

மத்திய அரசின் கல்வி வாரியத்தால் நடத்தப்படும் சிபிஎஸ்இ 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவுகள் இன்று வெளியாகியுள்ளது.

நாடு முழுவதும் 88 புள்ளி மூன்று ஒன்பது சதவீத மாணவர்கள் தேர்ச்சியடைந்துள்ளனர்.

இது, கடந்த ஆண்டைவிட பூஜ்யம் புள்ளி நான்கு ஒன்று சதவீதம் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களைவிட, மாணவிகள் அதிக அளவில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

பொதுத்தேர்வு எழுதிய மொத்த மாணவிகளில் 91 சதவீதம் பேர் தேர்ச்சியடைந்துள்ளதாகவும் சிபிஎஸ்இ தேர்வு கட்டுப்பாட்டு அதிகாரி தெரிவித்துள்ளார்.

சென்னை மண்டலத்தில் 97 புள்ளி மூன்று ஒன்பது சதவீத மாணவ, மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர். அதிக அளவாக விஜயவாடா மண்டலத்தில் 99 புள்ளி ஆறுசதவீத மாணவர்களும், திருவனந்தபுரம் மண்டலத்தில் 99 புள்ளி மூன்று இரண்டு சதவீத மாணவர்களும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தேர்ச்சி விகிதத்தில் சென்னை மண்டலம் மூன்றாவது இடத்தை பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் மாவட்டத்துக்கு உட்பட்ட நான்கு கிராமங்களில் கள்ளச்சாராயம் அருந்திய 15 பேர் உயிரிழந்தனர். 6 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உயிரிழந்த அனைவரும் செங்கல் சூளை தொழிலாளர்கள் என தெரியவந்துள்ளதாக அமிர்தசரஸ் புறநகர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக கள்ளச்சாராய விற்பனையாளர்கள் உள்ளிட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

நாட்டில் உள்ள அனைத்துத்தரப்பு மக்களும் ஒற்றுமையாக இருந்து தீவிரவாதத்துக்கு எதிரான நமது ஒற்றுமையை உலகுக்கு எடுத்துக்காட்டியிருப்பதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

தமிழகத்தின் தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தீவிரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை தெளிவாக எடுத்துக்கூறியிருப்பதாக தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கு எதிரான தாக்குதலில் பங்கேற்ற ராணுவ வீரர்களுக்கு தமிழக மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக, இம்மாவட்டத்துக்கு உட்பட்ட பழையகாயல் பகுதியில் பொதுமக்களுக்கான பதநீர் பந்தலை திரு எல். முருகன் தொடங்கிவைத்தார்.

<<<<<>>>>>

மகளிர் நலனை மேம்படுத்துவதில் தமிழகம் முன்னோடியாக திகழ்கிறது என்று மாநில அரசு கூறியுள்ளது.

இதுதொடர்பாக, மாநில அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தற்போதைய அரசு பொறுப்பேற்ற பின்னர், பெண்களுக்கான கட்டணமில்லா பயணம் திட்டம், மகளிர் உரிமைத்தொகை, புதுமைப்பெண், பணிபுரியும் மகளிருக்கான தோழி விடுதி, அரசுப்பணிகளில் மகளிருக்கு 40 சதவீத இடஒதுக்கீடு போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, சுயஉதவிக்குழுவினருக்கான கடன் வரம்பு அதிகரிப்பு, மகளிர் தொழில் முனைவோர் திட்டங்களும் செயல்படுத்தப்படுவதாக மாநில அரசு கூறியுள்ளது.

<<<<<>>>>>

தமிழகத்தின் நாகப்பட்டினம் மாவட்டத்தில், பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டப் பயனாளிகளுக்கான பதிவு முகாம் நடைபெற்று வருகிறது.

இதுவரை இத்திட்டத்தில், பயன்பெறாத விவசாயிகள் ஆதார் எண், வங்கிக்கணக்கு உள்ளிட்ட விவரங்களுடன் முகாமுக்கு சென்று பதிவு செய்து கொள்ளலாம் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - செல்வன் ஜெபராஜ் - 58 செகண்ட்ஸ்)*

<<<<<>>>>>

திரையுலகின் மிகப்பெரிய விழாக்களில் ஒன்றாக கருதப்படும் கேன்ஸ் திரைப்பட விழா பிரான்ஸில் இன்று தொடங்குகிறது.

இதில் பல்வேறு நாடுகளின் சிறந்த திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

வரும் 24-ஆம் தேதிவரை நடைபெறவுள்ள இந்த விழாவில், திரைப்பட கலைஞர்கள் மற்றும் தயாரிப்பாளர்கள் ஏராளமானோர் பங்கேற்கின்றனர்.

**Lights Beauty and Action** என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாக உள்ளது.

<<<<<>>>>>

தாய்லாந்து ஓபன் பேட்மிட்டன் போட்டி பாங்காக்கில் இன்று தொடங்குகிறது.

இப்போட்டி வரும் 18-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இதில் இந்தியாவின் ஸ்ரீகாந்த், லக்ஷ்யாசென், பிரியான்ஷு ரஜாவத், மால்விகா பன்சோத் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

---------

19 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்து போட்டியில் இந்தியா இன்று நேபாளத்தை எதிர்கொள்கிறது.

--------------

இத்தாலி சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ரோஹன் போபன்னா – செக் குடியரசின் **Adam Pavlasek** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<END>>>>>**